TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN
19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

## முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறைத் தீர்ப்பாளர்

மேல்முறையீட்டு மனு எண். 33 / 2012

திரு.அர.ஏழுமலை
த/பெ. திரு.அ.ரங்கசாமி
கணபதி நகர்
சட்டமங்களம்
மறைமலைநகர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

... மனுதாரர்
(திரு. அரா. எழுமலை )

எதிர்

கூடுதல் தலைமைப் பொறியாளர்
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
130, ஜி.எஸ்.டி.ரோடு
புதிய பஸ் நிலையம் எதிரே
செங்கல்பட்டு – 603 001.

... எதிர்மனுதாரர்
(திரு. எஸ். மனோகரன்/ உதவி
செயற்பொறியாளர்/இ&ப/திருப்போரூர்)

<u>கேட்புரை நாள் : 5–10–2012 & 14–12–2012</u>
<u>ஆணை நாள் : 27 –12–2012</u>

கணபதி நகர், திரு. அர. எழுமலை, அவர்களின் 13–8–2012 நாளிட்ட மேல்முறையீட்டு மனு 33 / 2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட மேல் முறையீட்டு மனு எண்.33/2012 மின்குறை தீர்ப்பாளர் முன்பு விசாரணைக்காக 5–10–2012 மற்றும் 14–12–2012 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டு மேற்சொன்ன மேல் முறையீடு மனுவையும் அதனைச் சார்ந்த பதிவுருக்களையும் எதிர்மனுதாரரின் பதிலுரையும் படித்த பின்னரும் இரு தரப்பினர்களின் விவதாங்களை கேட்டு அறிந்த பின்னரும் மின்குறை தீர்ப்பாளர் பின்வரும் ஆணையை பிறப்பிக்கிறார் : –

**ஆணை**

**1. மேல் முறையீடு மனு எண்.33/2012 மேல் முறையீட்டாளரின் வேண்டுகோள்:—**

இந்த மேல்முறையீட்டு மனு எண்.33/2012—இல் உள்ள மேல் முறையீட்டாளரின் வேண்டுகோள் என்னவென்றால் செங்கல்பட்டு மாவட்டம் வெண்பேடு கிராமத்தில் உள்ள புல எண். 258/12—இல் கொடுக்கப்பட்டுள்ள மின்இணைப்புகள் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் பல கடித செலவும் போக்குவரத்து செலவும் ஏற்படுத்தி மனஉளைச்சலுக்கு ஆளான அவருக்கு இழப்பீடு கிடைத்திடும் என்றால் அதனை எப்படி பெற்றிடுவது என்பதை விளக்கமாக அளித்து உதவிடவேண்டும். என்பதாகும்.

**2. வழக்கின் சுருக்க விவரம்**

மேல் முறையீட்டாளர் திரு.அர.ஏழுமலை 30—05—2012 அன்று கடிதம் மூலமாக செங்கல்பட்டு மின்குறை தீர்ப்பாளர் மன்றத்திற்கு முறையீடு செய்துள்ளார். அவரது முறையீடு மேற்கூறிய செங்கல்பட்டு குறை தீர்க்கும் மன்றத்தில் விசாரிக்கப்பட்டு மேற்கூறிய 28—07—2012 நாளன்று மன்றம் தனது இறுதி ஆணையை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையானது பின்வருமாறு உள்ளது:—

*“திரு.அர.ஏழுமலை, மறைமலைநகர் அவர்களின் மனு தொடர்பாக நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் 28—07—2012 அன்று கூடியது. மன்றத்தில் மனுதாரரின் கோரிக்கைகளை விரிவாக விவாதிக்கப்பட்டது. மன்ற உறுப்பினர்களும் மனுதாரரின் கோரிக்கைகளை ஏற்று அதற்கான விளக்கங்களும் பெறப்பட்டது. மேலும் மனுதாரர் கோரியபடி மின் இணைப்பை துண்டிக்க ஏதுவாக விவரங்களை ஆராய்ததில் துண்டிக்க கோரிய மின்இணைப்பு உள்ள வீட்டில் உள்ளவர்கள் அதே இடத்தில் நிலையாகவும் சட்ட பூர்வமாகவும் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்று புலப்படுகிறது. மேலும் அங்கு வசிப்பவர்களிடம் குடியுரிமை சான்றான வீட்டு வரி குடிமை பொருள் பெறும் அட்டை போன்றவைகள்*

*உள்ளதாக தெரிய வருகிறது. எனவே அவரின் இணைப்பை துண்டிக்க இயலாது என உத்தரவிடுகிறது".*

மேற்கூறிய முறையீட்டின் ஆணைக்கு எதிராக இந்த மேல் முறையீட்டாளர் மேற்கூறிய மேல் முறையீடு மனுவை மின்குறை தீர்ப்பாளர் முன்பு தாக்கல் செய்துள்ளார்.

**3. மேல் முறையீட்டாளரால் மேல் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வாதுரைகள்:–**

(அ) மின்இணைப்பு கொடுக்கப்பட்ட இடம் நில உடமை மேம்பாட்டு திட்டம் 1986ன்படி சர்வே எண்.258/12 ஆனது 17 நபர்கள் பெயரில் கூட்டு பட்டாவில் உள்ளது. அதன் பின் நிலவரி திட்டம் 1995/96–ன் படி சர்வே எண். 258/12ல் மூன்று உட்பிரிவுகளாக பிளவுபட்டுள்ளது. அதில் புல எண்.258/12 ஆனது 0.22 ஹெக்டேர் ஆகும் (55 சென்ட் நிலம்) அதில் கொடுக்கப்பட்ட மூன்று மின்இணைப்புகளும் புல எண்.258/12ல் குறிக்கப்பட்ட சான்று மற்றும் பத்திர ஆவணங்கள் பெற்று கொடுக்கப்பட்டுள்ளன. உட்பிரிவு செய்யப்பட்ட இடத்தில் கொடுக்கப்படவில்லை என்பதாகும்.

(ஆ) திரு.ரத்தினம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மின்இணைப்பு புல எண்.258/12ல் கொடுக்கப்பட்டுள்ளது. திரு.தாமோதரன் அவர்களுக்கு கொடுத்திட்ட மின்இணைப்பும் புல எண்.258/12ல் கொடுக்கப்பட்டுள்ளது. திரு.மோகன் அவர்களுக்கு கொடுத்திட்ட மின்இணைப்பும் புல எண்.258/12ல் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே புல எண்ணில் பலபாகமாக பிரிக்கப்பபடாத பட்சத்தில் / செட்டில்மெண்ட் செய்யப்படாதபட்சத்தில் மூன்று மின்இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) புல எண். 258/12இல் பெயர் பதிவாகத 10 வருடங்கள் கழித்து கொடுக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்றுக்கு திரு.ரத்தினம் என்பவருக்கு மின்இணைப்பு 05–07–1999ல் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) மின்இணைப்பு எண்.572–008–577 திரு.தாமோதரன் பெயரில் புல எண்.258/12ல் 0.22 ஹெக்டேரில் 17ல் ஒரு பங்கு 0.03 செண்ட் விஸ்தீரனத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்திற்கு மின்இணைப்பு 21.8.2004இல் பெறப்பட்டது. அவ்விடம் பாகம் பிரித்து காட்டியுள்ளபோது அவ்விடத்திற்கு முறையாக பத்திரபதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். தற்பொழுதுதான் திரு. தாமோதரன் அவர்கள் கடந்த 28.7.2011 அன்று" திருப்போரூரில் சார் பதிவகத்தில் தன் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் சர்வே எண்.258/12இல் அத்து பிரிக்கப்படாத பாகமாக 0.03 செண்ட் நிலம் சர்வே எண்.258/12இல் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படி இல்லாத போது மற்றவர்களின் ஆட்சேபனை இல்லை என கடிதம் பெற்றிட வேண்டும். இவை அனைத்தும் மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் பெற்றிடவில்லை.

(உ) மின்இணைப்பு எண்.572–008–577 திரு.மோகன் பெயரில் புன்செய் புல எண்.258/12ல் 0.22.0 ஹெக்டேரில் 0.55 சென்டில் 6 ¾ செண்ட் நிலத்திற்கு பெறப்பட்டதை முன்வைத்து மின்இணைப்பு பெறப்பட்டுள்ளது. அவ்விடம் செட்டில்மெண்ட் மூலம் புல எண்.258/12இல் 0.22.0 ஹெக்டேரில் 0.55 சென்டில் 6 ¾ செண்ட் நிலம் பத்திர பதிவில் குறிப்பிட்டுள்ளது. பத்திரத்தில் அவ்விடத்திற்கான தெருப் பெயரும் குறிப்பிடவில்லை. மின்இணைப்பு பெற்றிட வழங்கப்பட்ட ஆவணத்துடன் இணைக்கப்பட்ட பட்டா நகலில் சர்வே எண். 258பி என குறிப்பிட்டுள்ளது மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் விண்ணப்பித்திட்டபோது கிடைத்திட்ட பட்டா நகலில் குறிப்பிட்டுள்ளது. திரு.மோகன் பெயரில் பட்டா இல்லை என்பதும் குறிப்பிடதக்கது மற்றும் 739 எண்ணுள்ள பட்டாவில் பதிவாகிய புல எண்.258/12ல் பெயர் பதிவாகாத

திரு.மோகன் என்பவருக்கு அதனை முழுவதும் பார்வையிடாமல் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) மின்இணைப்புகள் கொடுக்கப்பட்ட இடம் பிரிவுபடாத ஒரே புல எண்ணினை சார்ந்தது என்பதற்கு குறிப்பிட்டு ஆதாரம் சமர்ப்பித்திட்ட போதும் நடவடிக்கை எடுத்திடவில்லை.

(ஐ) சட்டப் பூர்வமாக கூட்டு பட்டா உள்ள இடத்தில் ஒரு நபருக்கு சொந்தமான இடம் என எப்படி சொந்தமாயிற்று என மின்இணைப்பு பெற்றிட்ட நபர்களிடம் இருந்து ஆவணத்தினை பெற்று பராமல் உரிய ஆய்வு செய்யாமல் மின்இணைப்பினை துண்டிக்க இயலாது என உத்தரவிடுகிறது என கடிதம் கிடைத்திட்டது உண்மை ஆவணத்தினை மறைத்து பொய்யான சான்று கொடுக்கபட்டாலும் கொடுக்கப்பட்ட மின்இணைப்பு துண்டிக்க இயலாது உண்மை ஆவணத்தின் நகலை சமர்ப்பித்தாலும் உரிய ஆய்வு செய்யாமல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கபடாமல் பதில் கிடைத்திட்டதும் பல கடித செலவுகள் செய்தும் நேரிடையாக சந்தித்து முறையிட்டும் ஒரே புல எண்ணில் கொடுக்கப்பட்ட மின்இணைப்புகள் மீது நடவடிக்கை எடுத்திடாதது மனவேதனை அளித்திடுகின்றது.

**4. எதிர் மனுதாரரால் அவரது எதிர் உரையில் கூறப்பட்டுள்ள வாதுரை:–**

(அ) திரு.ரத்தினம், திரு.தாமோதரன் மற்றும் திரு.மோகன் தனித்தனியாக வீடு கட்டி வி.ஏ,ஓ. சான்று மற்றும் வீட்டு வரி இரசீதுடன் மின்இணைப்பு கேட்டு விண்ணபத்ததின் பேரில் மின்இணைப்பு வழங்கப்பட்டது.

(ஆ) மேற்படி மூவரும் மேற்கூறியபடி கொடுத்த அனைத்து சான்றிதழ்களின் நகல்களையும் திரு.அர.ஏழுமலை அவர்களுக்கு 25–12–2011ல் உதவி பொறியாளர் /

இப/திருப்போரூர் அவர்கள் மூலமாக அனுப்பப்பட்டு மேற்படி மூன்று மின்இணைப்புகள் வழங்கப்பட்டதில் தவறு ஏதும் இல்லாததால் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டது.

(இ) மேலும் ஏற்கனவே 03–11–2011 அன்று செயற்பொறியாளர் / இப/மறைமலைநகர் அவர்கள் திரு.ஏழுமலை அவர்களுக்கு சொந்தமான இடத்தில் மேற்படி நபர்கள் தவறான மின்இணைப்புகள் பெற்றுள்ளதாக கருதி அதற்குண்டான ஆவணத்தை சமர்ப்பித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

(ஈ) திரு.ஏழுமலை அவர்கள் இதுவரையில் அவரது பாகத்தில் உரிய ஆவணங்கள் கொடுத்து அவர் பாகத்தில் மேற்படி நபர்கள் மின்இணைப்பு பெற்றுள்ளார்கள் என தெரிவிக்கவில்லை. அப்படி தெரிவித்தால் தான் மின்இணைப்புகள் துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் மேற்படி மூன்று நபர்களும் தனியாக சர்வே எண்.258/12ல் கட்டி குடியிருக்கும் வீடுகளுக்கு பட்டா, செட்டில்மெண்ட் பத்திரம், வீடு கட்ட அனுமதி, வி.ஏ.ஓ. சான்று மற்றும் வீட்டு வரி இரசீது மற்றும் ரேஷன் கார்டு வைத்துள்ளார்கள். இது சம்மந்தமாக செங்கற்பட்டு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலக மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் 28–07–2012 அன்று திரு.அர.ஏழுமலை மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு பின்பு ஆவணங்கள் ஆய்வு செய்ததில் துண்டிக்க கோரிய மின்இணைப்பு உள்ள வீட்டில் உள்ளவர்கள் அதே இடத்தில் நிலையாகவும், சட்ட பூர்வமாகவும் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்று புலப்படுகிறது. மேலும் அங்கு வசிப்பவர்களிடம் குடியுரிமை சான்றான வீட்டு வரி, குடிமை பொருள் பெரும் அட்டை போன்றவைகள் உள்ளதாக தெரியவருகிறது. எனவே அம்மின் இணைப்பை துண்டிக்க இயலாது என உத்திரவு வழங்கப்பட்டது.

5. மின்குறை தீர்ப்பாளரின் தீர்வுகள் (Findings):-

5.1. மேற்கூறிய மேல் முறையீட்டாளர், திரு.அர.ஏழுமலையின் மனுவானது ஒரு மேல் முறையீட்டு மனுவாகும். அதாவது செங்கல்பட்டு குறை தீர்க்கும் மன்றத்தின் 28*07–2012 நாளிடப்பட்ட ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒரு மேல் முறையீட்டு மனுவாகும். அவரது மேல் முறையீட்டு மனுவுக்கு மின்குறை தீர்க்கும் மன்ற விதிகளின் 8வது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட இந்த மேல் முறையீடு மனுவுக்கு இந்த மின்குறை தீர்ப்பாளர் ஒரு மேல் முறையீட்டு அதிகார ஆயமாக தீர்ப்புரை வழங்க வேண்டியுள்ள நிலையில் உள்ளார். மன்ற விதிகளின்படி ஒரு மேல் முறையீட்டு அதிகார ஆயத்தின் கடமை என்னவென்றால் மேற்கூறிய செங்கல்பட்டு குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்ப்புரையானது சட்டப்படி சரியானதாக உள்ளதா அல்லது இல்லையா என்பதைப் பற்றி தீர்ப்புரை வழங்குவதுதான்.

5.2. இந்த மேல் முறையீட்டு மனுவிலுள்ள வேண்டுகோளானது சர்வே எண்.258/12ல் கொடுக்கப்பட்டுள்ள மின்இணைப்பு மீது நடவடிக்கை எடுத்திடல் வேண்டும் என்பது தான். இந்த வேண்டுகோள் தெளிவாக இல்லை. மின்இணைப்பின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது பற்றி மேல் முறையீட்டாளர் அவரது மேல் முறையீட்டு மனுவில் தெளிவாக கூறவில்லை. ஆனால், 14.12.2012 இல் நடந்த கேட்புரையின்பொழுது மேல்முறையீட்டாளர் அந்த மின்னிணைப்புகளை துண்டிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

5.3. மேற்கூறிய மேல் முறையீட்டாளர் மன்ற விதிகளின்படி ஒரு மின்நுகர்வோர் என்ற முறையில்தான் தனது மேல் முறையீட்டினையோ அல்லது குறைபாட்டியினையோ மின்குறை தீர்ப்பாளருக்கோ அல்லது மன்றத்திற்கோ தாக்கல் செய்ய முடியும். மன்றவிதி 2(உ) இல் முறையீட்டாளர் என்பது ;

(i) புதிய இணைப்புக்கான மனுதாரர்களை உள்ளடக்கிய பகிர்வு உரிமம் பெற்றவரால் மின்சாரம் வழங்கப்பட்ட நுகர்வோர்

(ii) நிறுமச் சட்டம் 1956 (1956இல்) அல்லது தற்போதுள்ள நடைமுறையில் உள்ள எந்தவொரு ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தன்னார்வ கூட்டமைப்பு

(iii) முறையீடு செய்த மைய அரசு அல்லது மாநில அரசு

(iv) ஒரே அக்கரைகொண்ட அதிகப்படியான நுகர்வோர் இருக்கும்போது, ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரோ

(v) நுகர்வோர் இறந்திருந்தால் அவரின் சட்டபடியானவாரிசுதாரர்கள் அல்லது சார்பாளர்கள்

இந்த மேல்முறையீட்டாளர், மேற்கண்ட மன்றவிதி பிரிவு 2(உ)இல் உள்ள முறையீட்டளார் என்ற வரையரைக்குள் வரவில்லை. எனவே, அவரின் மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் தள்ளுபடி செய்யவேண்டியது உள்ளது.

5.4. மேற்கூறியவாறு இந்த மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்ய வேண்டிய நிலையில் இருந்த போதிலும் இந்த மேல் முறையீட்டு மனுவிலுள்ள மேல் முறையீட்டின் கோரிக்கையான சர்வே எண். 258/12இல் உள்ள மின்னிணைப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதற்கான தீர்வு காண்பதற்காக மேல்முறையீட்டாளரின் வாதம், எதிர்மனுதாரரின் வாதம் ஆகியவற்றை ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளர் கீழ்கண்ட தீர்ப்பை வழங்குகிறார்.

5.5 கேட்புரை நாளில், மேல்முறையீட்டாளர் திரு. ஏழுமலை அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களாக, தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களையே தெரிவித்தார். எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரை நாளில் கலந்து கொண்ட திரு. எல். மனோகரன், உதவி செயற்பொறியாளரும் அவரின் உரையில் உள்ள விபரங்களையே தன்னுடைய வாதங்களாக கூறினார். மின்னிணைப்புகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதினால், முறையீட்டாளர் வாதங்களையே வழக்கெழு வினாவாக எடுக்கப்பட்டு, அவற்றிற்கான தீர்வு காணப்பட்டுள்ளது.

5.6 மேல் முறையீட்டு மனுவின் பத்தி 4ல் மேல் முறையீட்டாளர் குறிப்பிடுகிற வாதுரை என்னவென்றால் எதிர் மனுதாரர் கொடுத்த மூன்று மின்இணைப்புக்கும் சர்வே எண்.258/12ல் உட்பிரிவு செய்யப்பட்ட இடத்தில் கொடுக்கப்படவில்லை என்பதாகும்.

5.7 மேல் முறையீட்டு மனுவில் உள்ள 6வது பத்தியில் ஒரே சர்வே எண்னை பல பாகமாக பிரிக்கப்படாத பட்சத்தில் / செட்டில்மெண்ட் செய்யப்படாத பட்சத்தில் மூன்று மின்இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்ற வாதுரையை எழுப்பியுள்ளார்.

5.8 எதிர் மனுதாரர் தனது எதிர் உரையில் கீழ்க்கண்டவாதுரையை கூறியுள்ளார்:–

*“(அ) கூட்டுபட்டாவாக உள்ள இடத்தில் மேற்கண்ட நபர் உள்ள மூவரும் தனித்தனியாக வீடு கட்டி வி.ஏ,ஓ. சான்று மற்றும் வீட்டு வரி இரசீதுடன் மின்இணைப்பு கேட்டு விண்ணபத்ததின் பேரில் மின்இணைப்பு வழங்கப்பட்டது”.*

5.9 இந்த விவாதத்திற்கான தீர்வை காண மின்சார பகிர்மான விதிதொகுப்பின் பிரிவு 27(14)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ஒரு கதவிலக்கத்தில் அல்லது துணைக்கதவிலக்கத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அமைந்திருந்தால் அங்கு நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடமாக இருப்பின் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் ”*

5.10 மேற்கூறிய தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் பிரிவு 27 (14)இன்படி ஒரு கதவிலக்கத்தில் அல்லது துணை கதவிலக்கமாக ஒன்றுக்கு மேற்பட்ட நபர் அல்லது அமைப்பு இருந்தால் மேற்கூறிய நபர் அல்லது அமைப்பு இருக்கும் பகுதியானது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக இருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ளது. எதிர்மனுதாரால் மின்னிணைப்பு கொடுக்கப்பட்ட மூன்று வீடுகளும் தனித்தனியாக அடையாளம் காட்டக்கூடிய வீடுகள் என்று எதிருரையில் கூறப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டாளரும் மேற்கூறிய மூன்று வீடுகளும் தனி, தனி

வீடுகள் அல்ல என்று வாதிடவில்லை. எனவே எதிர் மனுதாரார் கொடுத்துள்ள மூன்று மின்இணைப்புகளும் மேற்கூறிய மின்பகிர்மான தொகுப்பின் பிரிவு 27 (14)க்கு இணங்கியவாறு அமைந்துள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

5.11 பத்தி 6 (அ)வில் மேல்முறையீட்டாளர் திரு.ரத்தினத்திற்கு கொடுத்துள்ள கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழில் சர்வே எண். 258/12ல் மொத்த விஸ்தீரணம் மற்றும் நான்கு புற எல்லைகள் ஆகியவற்றை குறிப்பிடவில்லை என்று மேல் முறையீட்டாளர் வாதிட்டுள்ளார். மேலும், புல எண் 258 /12இல் பெயர் பதிவாத 10 வருடங்கள் கழித்து கொடுக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்றுக்கு திரு.ரத்தினம் அவர்களுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

5.12 எதிர்மனுதாரர், தன்னுடைய வாதுரையில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார் திரு. ரத்தினம் என்பவர் 1986லிருந்து சர்வே எண்.282/12இல் வீடுகட்டி வி.ஏ.ஓ. சான்று பெற்று மின்னிணைப்பு பெற்று 1986 முதல் குடியிருந்து வருவதாகவும் அதற்குரிய வீட்டு வரி ரசீதும் சமர்ப்பித்துள்ளார். பின்னர் அந்த வீடு உள்ள இடம் உட்பிரிவு செய்யப்பட்டு 282/12ஏ என்று மாற்றப்பட்டு கூட்டுப்பட்டவாக திரு. ரத்தினம் மற்றும் திரு. ஆனந்தன் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

5.13 மேலும், ஆவணங்களை ஆய்வு செய்ததில் துண்டிக்க கோரிய மின்னிணைப்பு உள்ள வீட்டில் உள்ளவர்கள் அதே இடத்தில் நிலையாகவும், சட்டபூர்வமாகவும் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்று புலப்படுகிறது என்றும், மேலும், அங்கு வசிப்பவர்களிடம் குடியுரிமை சான்றான வீட்டு வரி குடிமைப் பொருள் பெரும் அட்டை போன்றவைகள் உள்ளதாகவும் தெரிவதால் அம்மின்னிணைப்புகளை துண்டிக்க இயலாது என்று உத்தரவிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

5.14 மேற்கூறிய கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழானது திரு. ரத்தினம் மின்னிணைப்புக்கு தகுதி உடையவர்தான் என்பதை உறுதி செய்வதற்காக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த சான்றிதழில் தெருப்பெயர் அம்மன்கோயில் தெரு என்றும், வீட்டின் எண்.176 என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, வீட்டின் அடையாளம் தெளிவாக கூறப்பட்டுள்ளது. நான்குபுற எல்லைகளும், ஒரு இடத்தை சரியாக அடையாளம் காட்டுவதற்கு தான் குறிப்பிடப்படுகிறது. தெருப்பெயர், வீட்டின் எண். தெரிவிப்பதினால், ஒரு வீடு சரியாக அடையாளம் காட்டப்படுகிறது. எனவே நான்குபுற எல்லைகள் தெரிவிப்பதின் காரணம் மேற்கண்ட தகவல்களினால் நிறைவேறி விடுகிறது. இந்திய பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படவேண்டிய ஒரு அசையாச் சொத்தின் விற்பனை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பத்திரங்களுக்குத்தான் மேற்கூறிய மொத்த விஸ்தீரணம் மற்றும் நான்கு புற எல்லைகள் ஆகியவற்றை குறிப்பிடல் வேண்டும்.

5.15 திரு. ரத்தினம், அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்கும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவர் வீட்டின் உரிமையாளர் என்பதற்கு, கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழை சமர்ப்பித்துள்ளார். மின்னிணைப்பு வழங்கப்பட்ட நாள் 5.7.1989 என்றும் அறியமுடிகிறது.

5.16 அவருக்கு மின்னிணைப்பு வழங்கும் பொழுது மின்சார சட்டம் 2003 பிறப்பிக்கப்படவில்லை வாரியத்தின் விதிமுறைகளும் மற்றும் வரையறைகளும் (terms and conditions) தான் அமலில் உள்ளது. அப்பொழுது உள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளின் (terms and conditions) விதி 6.01(a)இன்படி, மின்னிணைப்பு கேட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்போர் விண்ணப்பம் வழங்கலாம் என்று உள்ளது. திரு. ரத்தினம் அவர்கள் தன்னுடைய விண்ணப்பத்துடன் கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்றிதழையும் இணைத்து சமர்ப்பித்து உள்ளார். மேற்படி சான்றிதழில் கிராம நிர்வாக

அலுவலர் சர்வே எண். 258/12இல் சுமார் 0.03 சென்டு விஸ்தீரணத்தில் கூரை வீடும், அடிமனையும் சொந்தமாக உள்ளது என்று கூறியுள்ளார். மேலும் மேற்படி சான்று மின்சார இணைப்பு வழங்குவதற்காக வழங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

5.17 எனவே, இரத்தினம் அவர்கள் கிராம நிர்வாக அலுவலரின் சான்றின்படி வீட்டின் உரிமையாளர் என்பதால் அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்கியது வாரிய விதிகளின்படிதான் என்று தெரியவருகிறது. மேலும், அவருக்கு மின்னிணைப்பு வழங்கும் பொழுது எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்காமல் மின்னிணைப்பு வழங்கப்பட்டு 23 வருடங்களுக்கு பின்பு ஆட்சேபனை செய்துள்ளது மனுதாரரின் (laches) காலங்கடந்த செயல் என்றும் கருதப்படுகிறது.

5.18 மேல்முறையீட்டாளர் பத்தி 6(ஆ)வில் திரு. தாமோதரனுக்கு வழங்கிய மின்னிணைப்பு சம்பந்தமாக கீழ்கண்ட வாதுரையை எழுப்பியுள்ளார்.

பத்தி 6 (ஆ)விலுள்ள வாதுரையானது பின்வருமாறு உள்ளது.

*“மின்இணைப்பு எண்.572–008–577 திரு.தாமோதரன் பெயரில் புல எண்.258/12ல் 0.22.0 ஹெக்டேரில் 17ல் ஒரு பங்கு 0.03 சென்ட் விஸ்தீரனத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்திற்கு மின்இணைப்பு பெறப்பட்டது. அவ்விடம் பாகம் பிரித்து காட்டியுள்ளபோது அவ்விடத்திற்கு முறையாக பத்திரபதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லாத போது மற்றவர்களின் ஆட்சேபனை இல்லை என கடிதம் பெற்றிட வேண்டும். இவை அனைத்தும் மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் பெற்றிடவில்லை. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் 20.10.2003 அன்று சான்று கொடுத்துள்ளார். தெரு பெயர் குறிப்பிடவில்லை. இதற்கு முன்னர் வழங்கிட்ட மின்னிணைப்புக்கான கடிதத்தில் தெருப்பெயர் குறிப்பிட்டுள்ளது. 20.1.2004 வரி செலுத்திட்ட காரணத்தால் கிராமத்தின் தலைவர் அவர்கள் 15.3.2004இல் புல எண். 258/12இல் ஊராட்சி அனுமதி அளித்துள்ளது எனவும் மின்னிணைப்பு வழங்கலாம் என சான்று அளிக்கின்றார். ஆனால் மின்னிணைப்பு 21.8.2004இல் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தான் திரு. தாமோதரன் அவர்கள் கடந்த 28.7.2011 அன்று திருப்போரூர் சார்பதிவகத்தில் தன்பெயரில் செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண். 258/12இல் அத்துபிரிபடாத பாகமாக 0.03சென்ட் நிலம் சர்வே எண்.258/12ஏ ஆக பதிவு செய்யப்படுகின்றது”*

5.19 எதிர்மனுதாரர் திரு. தாமோதரன் அவர்கள் 1986 முதல் 2004வரை அவரின் தம்பி இரத்தினத்துடன் கூட்டு குடும்பமாக இருந்ததாகவும் பின்னர் 2004இல் அவரது தம்பி திரு. இரத்தினம் மற்றும் திரு. ஆனந்தன் பெயரில் உள்ள கூட்டு பட்டாவான சர்வே எண். 282/12ஏஇல் தனித்தனியாக வீடுகட்டி, பஞ்சாயத்து வரைபடம் அனுமதி வாங்கி வீடுகட்டி முடித்தபிறகு வீட்டுவரி செலுத்திய இரசீது மற்றும் வி.ஏ.ஓ. சான்று பெற்று மின்னிணைப்பு வாங்கியதாகவும் தற்பொழுது 16.11.2011இல் அந்த வீடு உள்ள இடம்தான் செட்டில்மென்ட்படி அவரது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார் என்று அவரது வாதுரையில் கூறியுள்ளார்.

5.20 திரு.தாமோதரன் ஒரு பாகப் பிரிவினை செய்யப்படாத நிலத்தில் வீடு கட்டி இருந்தால் அதனை இந்த மேல் முறையீட்டாளர் அந்த வீடு கட்டப்படுவதை ஆட்சேபித்து தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் (Competent Civil Court) அவரது ஆட்சேபனையை எழுப்பி ஒரு வழக்கு தொடுத்து இந்த வீடு கட்டுவதை தடுத்தி நிறுத்த ஒரு தடையாணையை பெற்று இருக்க வேண்டும். திரு.தாமோதரன் வீடு கட்டும்போது எவ்வித ஆட்சேபனையையும் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதை இந்த மேல் முறையீட்டாளர் ஆட்சேபிக்கிறார். திரு.தாமோதரனுக்கு பாகப் பிரிவினை செய்யப்படாத நிலத்தில் வீடு கட்டும் உரிமை உண்டா அல்லது இல்லையா மற்றும் அந்த வீடு கட்டுவதற்கு அந்த நிலத்தின் மற்றைய சக உரிமையாளர்களின் (Co-owners) இசைவு பெற வேண்டுமா அல்லது இல்லையா என்பது பற்றிய பிரச்சனைகளுக்கு உரிய முடிவு எடுப்பதற்கு ஒரு தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு. மின்குறைதீர்ப்பாளருக்கு அந்த அதிகாரம் இல்லை. மின்னிணைப்பு பெறுவதற்கு 2003ம் ஆண்டு மின்சார சட்டத்தின் 43வது பிரிவின்படி உரிமையாளர் (owner) அல்லது குடியிருப்பவர் (occupier) எவரும் அத்தகைய மின்இணைப்பு கோருவதற்கு தகுதி உடையவர் ஆவார்.

5.21 திரு. தாமோதரன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மின்னிணைப்பின் ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவர் கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக அறியமுடிகிறது.

(1) வெண்பேடு ஊராட்சி மன்ற தலைவர் அளித்த சான்றிதழ்

(2) வெண்பேடு ஊராட்சி மன்றம் அளித்த 2003–2004க்கான வீட்டு வரி ரசீது

(3) வெண்பேடு கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்றிதழ்

(4) வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்து வழங்கிய அனுமதி

5.22 மேற்கண்ட ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு. தாமோதரன் அவர்கள்தான் மின்னிணைப்பு பெற விண்ணப்பிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் என்று தெளிவாகிறது. ஆனால், மேல்முறையீட்டாளர், மின்னிணைப்பு வழங்கும்பொழுது அவருடைய ஆட்சேபனையை தெரிவிக்காமல், தற்பொழுது மின்னிணைப்பு வழங்கப்பட்ட 7 ஆண்டுகளுக்கு ஆட்சேபனையை தெரிவிப்பது காலங்கடந்த செயல் என்று தெரிகிறது. எனவே அந்த மின்னிணைப்பு வழங்கப்பட்டது மின்சாரச் சட்டம் 2003இன் பிரிவு 43இன்படிதான் உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

5.23 **5.10. பத்தி 6 (இ)ல் கூறப்பட்டுள்ள வாதுரை:–**

பத்தி 6 (இ)ல் கூறப்பட்டுள்ள வாதுரை பின்வருமாறு உள்ளது:–

*“(உ) மின்இணைப்பு எண்.572–008–577 திரு.மோகன் பெயரில் புன்செய் புல எண்.258/12ல் 0.22.0 ஹெக்டேரில் 0.55 சென்டில் 6 ¾ சென்ட் நிலத்திற்கு பெறப்பட்டதை முன்வைத்து மின்இணைப்பு பெறப்பட்டுள்ளது. அவ்விடம் செட்டில்மென்ட் மூலம் புல எண்.258/12இல் 0.22.0 ஹெக்டேரில் 0.55 சென்டில் 6 ¾ சென்ட் நிலம் பத்திர பதிவில் குறிப்பிட்டுள்ளது. பத்திரத்தில் அவ்விடத்திற்கான தெருப் பெயரும் குறிப்பிடவில்லை. மின்இணைப்பு பெற்றிட வழங்கப்பட்ட ஆவணத்துடன் இணைக்கப்பட்ட பட்டா நகலில் சர்வே எண். 258பி என குறிப்பிட்டுள்ளது மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில்*

*தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் விண்ணப்பித்திட்டபோது கிடைத்திட்ட பட்டா நகலில் குறிப்பிட்டுள்ளது. திரு.மோகன் பெயரில் பட்டா இல்லை என்பதும் குறிப்பிடதக்கது மற்றும் 739 எண்ணுள்ள பட்டாவில் பதிவாகிய புல எண்.258/12ல் பெயர் பதிவாகத திரு.மோகன் என்பவருக்கு அதனை முழுவதும் பார்வையிடாமல் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது".*

எதிர்மனுதாரர், திரு. மோகனை விசாரித்ததில் சர்வே எண்.258/12இல் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 258/12பி என மனுதாரர் அவரது தந்தை திரு. வைரவ நாயக்கர் மற்றும் மூன்று நபர்களின் பெயரில் கூட்டுப்பட்டாவாகவும், அதில் அவரின் தந்தை திரு. வைரவ நாயக்கரின் பாகத்தை திரு. மோகனுக்கு செட்டில்மென்ட் பத்திரபதிவு 2003இல் செய்யப்பட்டதாகவும் 2007ம் ஆண்டு வீட்டுவரி இரசீது இணைத்து மின்னிணைப்பு பெற்றதாக கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

5.24 திரு. மோகன் மின்னிணைப்பு பெறுவதற்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள்

(1) அவரின் தந்தை அவருக்கு எழுதிகொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் நகல் (இதில் சர்வே எண்.258/12இல் உள்ள 0.6 ¾ செண்டும் உள்ளது).

(2) 2005–2006ஆம் ஆண்டிற்கான வெண்பேடு ஊராட்சி வழங்கிய வீட்டுவரி இரசீது எண்.20203 நாள் 2.7.2005 இன் நகல்

(3) பட்டா எண்.215 இன் நகல்

5.25 மேற்கண்ட ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு. மோகன் அவர்கள் வீட்டின் உரிமையாளர் என்பது வீட்டுவரி இரசீதின் மூலம் தெரியவருகிறது. மேலும் சர்வே எண். 218/12இல் உள்ள உரிமையாளர்களில் 17 பேரில் ஒருவரான திரு. வைரவ நாயக்கர் அவர்கள் அவர்களது மகனாகிய திரு. மோகனுக்கு அந்த நிலத்தை செட்டில்மென்ட் செய்துள்ளார் என்றும் தெரியவருகிறது. ஆனால், செட்டில்மென்ட் பத்திரத்தில் புலஎண். 258/12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டாவில் 258/12பி என்று

உள்ளது. அந்த வித்தியாசம் கவனிக்கப்படவில்லை என்பது தான் மேல்முறையீட்டாளரின் வாதம்.

5.26 மின்சாரச் சட்டம் 2003இன் பிரிவு 43இன்படி உரிமையாளர் (owner) மற்றும் குடிருப்பவர் (occupier) மின்னிணைப்பை பெற தகுதி உள்ளவர் என்று தெரிகிறது. மேலும், தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தினால் வகுத்துரைக்கப்பட்ட விண்ணப்ப பாரத்தில் உரிமையாளர் என்பதற்கு ஆதாரமாக விற்பனை பத்திரம் அல்லது சொத்து / தண்ணீர் கழிவுநீர் வரி செலுத்திய ரசீது இணைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. திரு. மோகன் அவர்கள் அவருடைய பெயரில் உள்ள வீட்டுவரி இரசீது மற்றும் அவரின் பெயருக்கு அவரின் தகப்பனார் அந்த நிலத்தை செட்டில் மென்ட் செய்த பத்திரத்தையும் இணைத்துள்ளதால், அவர்தான் அந்த வீட்டின் உரிமையாளர் என்று தெரிவதால், அந்த வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கியது மின்சாரச்சட்டம் 2003, பிரிவு 43இன்படிதான் உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

5.27 2003ம் ஆண்டு மின்சார சட்டத்தில் ஒரு மின்இணைப்பு எத்தகைய சூழ்நிலைகளில் துண்டிக்கப்பட வேண்டும் என்பது பற்றி தனிப்பட்ட வகை முறைகள் உள்ளன. அவை பின்வருமாறு உள்ளன:–

*“(அ) பிரிவு 47 (1)ன்படி மின்நுகர்வோர் பிணைய தொகை (Security Deposit) கொடுக்கத் தவறுகை பிரிவு 47 (1).*

*(ஆ) மின்உரிமதாரருக்கு கொடுக்கப்பட வேண்டிய மின்கட்டணம் மற்றும் மற்றைய பணம் எதுவும் கொடுக்கத் தவறுகை {பிரிவு 56 (1) }*

*(இ) மின்உரிமதாரரால் கண்டுபிடிக்கப்பட்ட மின்திருட்டு (பிரிவு 135 (1–எ),*

*(ஈ) மின்நுகர்வோர் குடியிருக்கும் வளாகம் எதையும் பார்வையிடுவதற்காக நுழைவு செய்யும் உரிமையை மின்உரிமதாரரின் அலுவலர் எவருக்கும் மின் நுகர்வோர் மறுத்தல் (பிரிவு – 163)*

எனவே மேல் முறையீட்டின் ஆட்சேபனைக்கு உரிய மூன்று மின்இணைப்புகள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு மேற்கூறிய மின்சார சட்டத்தின் பிரிவுகளின்படி அதிகாரம் இல்லை.

*5.28* இந்த மேல்முறையிட்டு மனுதாரரின் வாதம், இந்த மூன்று மின்னிணைப்புகளும், பாகம் பிரிக்கப்படாத ஒரே புல எண்ணில் உள்ளவை என்றும், அந்த புல எண்.258/12 என்பது 17 பேருக்கு உரிமை உடையது என்றும், கூட்டுப் பட்டாவிலுள்ள மற்ற உரிமையாளர்களிடம் இருந்து தடையில்லா சான்று பெறப்படாமல் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதுதான்.

*5.29* இந்த மேல்முறையீட்டாளரின் வாதத்தின்படி அவரும் 258/12இல் தான் கூட்டுப்பட்டா உரிமையாளர்களின் ஒருவரின் வாரிசு ஆவார்.

*5.30* மேலும், மேல்முறையீட்டாளர் இந்த மின்னிணைப்பை பெற்ற மூன்று நபர்களும், கூட்டுப்பட்டா உரிமையாளர்களின் வாரிசுகள்தான் என்பதையும் ஒத்துக் கொள்கிறார். ஆனால் பங்கு பிரிக்கப்படாமல் உள்ள இடங்களில் அவர்கள் கட்டிய வீட்டிற்கு, அவர்கள் சட்டப்படி உரிமையாளர்கள் இல்லை என்பதினால், வீடுகளுக்கு அவர்கள் உரிமையாளர்கள் என்பதினால் கொடுக்கப்பட்ட மின்னிணைப்புகள் தவறாக கொடுக்கப்பட்டவை. எனவே, துண்டிக்கப்படவேண்டும் என்பது தான் அவரின் வாதம்.

*5.31* மேற்கண்ட (மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ள ) வீடுகளுக்கு மின்னிணைப்பை பெற்றவர்கள் தான் சட்டப்படி உரிமையாளரா இல்லையா அல்லது பாகப்பிரிவினை செய்யப்படாத இடத்தில் வீடுகட்டும் உரிமை ஒருவருக்கு உள்ளதா இல்லையா மற்றும் பிரிவினை செய்யப்படாத இடத்தில் வீடு கட்டுவதற்கு மற்றவர்களின் இசைவு பெறவேண்டுமா அல்லது இல்லையா என்பது போன்ற பிரச்சனைகளுக்கு உரிய முடிவு எடுப்பதற்கு ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு.

*5.32 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 43வது பிரிவின்படி உரிமையாளர் (owner) மற்றும் குடியிருப்பவர் (occupier) எவரும் மின்னிணைப்பு பெறுவதற்கு தகுதியானவர் ஆவார்.*

*5.33 இந்த மனுவில் குறிப்பிடப்பட்ட மூன்று மின்னிணைப்புகளும் தனித்தனியாக அடையாளம் காட்டக்கூடிய வீடுகளாக உள்ளது என்பது தெரிகிறது. மேல்முறையீட்டாளரும் மின்னிணைப்பு வழங்கப்பட்டவை தனித்தனியான வீடுகள் இல்லை என்று வாதிடவில்லை. மேற்படி நபர்கள் அங்கு குடியிருக்கவில்லை என்றும் வாதாடவில்லை. மேற்படி வீடுகள் கட்டியது அவர்கள்தான் என்பதிலும் வேறுபட்ட கருத்தில்லை, (அடிமனைதான் பாகம் பிரிக்கப்படாத இடம் என்று வாதிடப்படுகிறது ) வீடுகளுக்கு மின்னிணைப்பு பெற்றவர்கள் தாம் உரிமையாளர்கள் என்று கிராம அலுவலரால் சான்று அளிக்கப்பட்டுள்ளது. வீட்டுவரி ரசீது மின்னிணைப்பு பெற்றவரின் பெயரில் உள்ளது. (திரு. ரத்தினத்தின் ரசீது சமர்ப்பிக்கப்படவில்லை) என்பதும் அறியப்படுகிறது. மின்னிணைப்பு வழங்கப்படும் பொழுது இந்த மேல்முறையீட்டாளரோ அல்லது பாகப்பிரிவினை செய்யப்படாத இடத்தின் சக உரிமையாளர்களோ எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதும் தெரிகிறது. மேலும், மின்னிணைப்பு பெற்ற மூவரும் வீட்டின் உரிமையாளர்கள் இல்லை என்பதற்கான ஆவணங்கள் எதுவும் மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மின்னிணைப்புகள் அப்பொழுது இருந்த விதிகளில் கூறியுள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுதான் வழங்கப்பட்டுள்ளன என்பது மேலேயுள்ள பத்திகளின்படி தெளிவாகிறது. எனவே வழங்கப்பட்ட மின்னிணைப்புகள் மூன்றினையும், மின்துண்டிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.*

*5.34* மேற்கூறிய சூழ்நிலைகளில் செங்கல்பட்டு மின்குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்ப்புரையில் தலையீடுவதற்கு மின்குறை தீர்ப்பாளருக்கு எவ்விதமான சட்ட ஆதாரம் எதுவும் இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

5.35 மேற்கூறிய தீர்வுகளுடன் மேற்கூறிய மேல் முறையீட்டு மனு எண்.33/2012 ஆனது மின்குறை தீர்ப்பாளரால் இறுதியாக முடிவு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு.அர.ஏழுமலை
த/பெ. திரு.அ.ரங்கசாமி
கணபதி நகர், சட்டமங்களம்
மறைமலைநகர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2. கூடுதல் தலைமைப் பொறியாளர்
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
130, ஜி.எஸ்.டி.ரோடு
புதிய பஸ் நிலையம் எதிரே
செங்கல்பட்டு – 603 001.

3. தலைவர்
தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை
சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணினி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.